



மத்திய சென்னையில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் திருவல்லிக்கேணி, ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாவட்டச் செயலாளர் நே சிற்றரசு, பகுதிச்செயலாளர்கள் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், வினோத் வேலாயுதம், மாமன்ற உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விரல்ரேகை ஒப்பீடு செய்து

## ஆவணங்கள் பதிவின்போது - ஆள்மாறாட்டத்தைத் தடுக்கும் வசதி!

### வணிகவரி – பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜுன் 21-

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று(20.6.2024) சென்னை அண்ணாசாலை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி (ம)பதிவுத்துறை வளாகத்தில் உள்ள தென் சென்னை, இணை 1, சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் பதிவின்போது விரல்ரேகை ஒப்பீடு செய்துஆள்மாறாட்டத்தை தடுக்கும் மேம்படுத் தப்பட்ட வசதியை தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி பதி வுத்துறையில் போலி ஆவ ணப்பதிவினை தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பதிவுக்கு தாக்கல்செய்யப் பட்ட ஆவணப்பதிவு குறித்த விழிப்புணர்வு செய்தியினை முன் ஆவணதாரருக்கு குறுஞ் செய்தியாக அனுப்பிடும் வசதி மற்றும் எழுதி கொடுப் பவர்/ எழுதி வாங்குபவரது விரல்ரேகை, ஆதார் மற்றும் கருவிழிப்படல தரவுகளுடன் ஒப்பிட்டு சரிபார்ப்பதன்

மூலம் தவறான ஆவணப் பதிவுகள் தடுக்கப்பட்டுவ ருகின்றன.

இந்நிலையில் ஆள்மா றாட்டத்தை முற்றிலும் தவிர்க்கும்நோக்குடன் ஒரு நபர் சொத்தை விற்கும் போது(Executant/Seller) தனது சொத்து விற்ப னையை ஒத் துக்கொள்ளும் முகமாக சார் பதிவகத்தில் விரல் ரேகையை பதிவு செய்யும் போது இந்த சொத்து தொடர்பாக முந் தைய ஆவணப்பதிவின் போது சொத்து உரிமையா ளர் (Claimant/Buyer) நிலை யில் அவரிடம் பெறப்பட்ட விரல்ரேகையுடன் ஒப்பிட்டு, இரண்டு விரல் ரேகைகளும் ஒத்திருக்கும் பட்சத்தில் மட் டுமே பதிவுக்கு ஏற்கும் வண் ணம்ஸ்டார் 2.0 மென்பொ ருளில் மாற்றம் செய்யப்பட் டுள்ளது.

அவ்வாறு பொருந்தாத நிகழ்வுகளில் சார்பதிவாளர் ஆவணப்பதிவின் உண்மை நிலையை விசாரித்து பதிவி னைமேற்கொள்ளும் வண் ணம் மென்பொருள்வடிவ மைக்கப்பட்டுள்ளது.

இந்த மேம்படுத்தப்பட்ட வசதியின் மூலம் ஆவணப்பதி வில்ஆள்மாறாட்ட மோசடி முற் றிலும் தவிர்க்கப்படுவதுடன், பொதுமக்களின் சொத்துக்களும் பாதுகாக்கப்படுவதை பதிவுத் துறை உறுதி செய்கிறது.

இந்தவிரல்ரேகை ஒப்பீடு செய்து ஆள்மாறாட்டத்தை தடுக்கும் வசதி 13.2.2018க்குப் பிந்தைய ஆவணங்களுக்கு மட்டுமேபொருந்தும் எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்நிகழ்ச்சியில் சோழவந் தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ .வெங்கடேசன், பதிவுத்து றைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும்

பதிவுத்துறை உயர் அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.

### குடியரசுத் தலைவர்

## திருமதி திரவுபதி முர்மு பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன் 21-

குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவர்களின் பிறந்த நாளான நேற்று, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில் குடியரசுத் தலைவர் அவர்கள் நல்ல உடல் நலனோடு பெரு வாழ்வுவாழ்ந்திடவேண்டுமென வாழ்த்தியுள்ளார்.

இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை யொட்டிதமிழ்நாடுமுதலமைச்சர்



மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து வெளியிட் டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**குடியரசுத் தலைவர் திரு மதி திரவுபதி முர்மு அவர்க ளுக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.**

**நமது குடியரசுத் தலை வர் அவர்கள் நல்ல உடல்ந லனோடும், மகிழ்ச்சியோ டும், மனநிறைவளிக்கும் பெருவாழ்வினை வாழ விழைகிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா: ஆர்.விஜயவர்மன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## இராயபுரம் 52-வது வட்டத்தில் நல உதவிகள் வழங்கல்!

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்

சென்னை, ஜுன் 21 -

முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் நூற் றாண்டு நிறைவு விழா சென்னை வடக்கு மாவட் டம் இராயபுரம் மேற்கு பகுதி 52வது வட்டத்தில் நாளை ( 22- 06- 2024 - சனிக்கிழமை) காலை 11 மணியளவில் அப்பையர் சந்தில் நலத்திட்ட உதவி கள் வழங்கும் நிகழ்ச்சி ஆர். விஜயவர்மன் நிகழ்ச்சி ஏற் பாட்டில் நடைபெறுகிறது.

இதில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ. பெ. சுரேஷ் வரவேற்க, 52வது வட்ட செயலாளர் எஸ்.. புகழேந்தி ,மாமன்ற உறுப்பினர் கீதா சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்..

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி. சேகர் எம்.எல்.ஏ., டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. , இராயபுரம் சட்ட மன்ற உறுப்பினர் ஐட்ரீம். இரா. மூர்த்தி ஆகியோர் நலத்திட்ட உதவி வழங்கு கின்றனர்.

வட்ட துணை செயலா ளர் எஸ். கயல்விழி நன்றி கூறுகிறார்.

அதுசமயம், மாநில நிர் வாகிகள், தலைமை செயற் குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர் கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட, பகுதி அணிக ளின் அமைப்பாளர்கள், நிர் வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவ ரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

### காத்திருப்போர் பட்டியலுக்கு

## மதுவிலக்கு ஏ.டி.ஜி.பி. அதிரடி மாற்றம்!

### அரசு நடவடிக்கை!

சென்னை: ஜுன் 21 -

தமிழ்நாட்டில் ஐ.பி.எஸ். அதிகாரிகள் 4 பேரை பணி யிடமாற்றம் செய்து தமிழ் நாடு அரசு உத்தரவிட்டுள் ளது. மதுவிலக்கு மற்றும் போதைப் பொருள் தடுப் புப் பிரிவு ஏடிஜிபி மகேஷ் குமார் அகர்வால், மதுவி லக்கு வடக்கு மண்டல எஸ்பி செந்தில்குமார் காத் திருப்போர் பட்டியலுக்கு அதிரடியாக மாற்றம். சட் டம் ஒழுங்கு ஏடிஜிபி அருண், மதுவிலக்குப் பிரிவை கூடுதலாக கவனிப் பார். கீழ்பாக்கம் துணை கமிஷனர் கோபி, மதுவி லக்கு வடக்கு மண்டல எஸ் பியாக மாற்றம்.


